**இராம கோபாலன்**
*நிறுவன அமைப்பாளர்*

**இந்து முன்னணி,** *தமிழ்நாடு*
59, அய்யா முதலி தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-28457676

25-8-2009

# விநாயகர் சதுர்த்தி திருவிழா விசர்ஜன ஊர்வலம் சுமுகமாக நடைபெற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர் இராம கோபாலன் அறிக்கை

கடந்த பல வருடங்களாக விநாயகர் சதுர்த்தி திருவிழா மிக சிறப்பான முறையில் நடைபெற்று வந்துள்ளது. சாதி ஏற்றத்தாழ்வுகளைக் களையும் வகையிலும், இந்துக்களை ஒன்றிணைக்கும் வகையிலும் இந்தத் திருவிழாவானது, மூன்று நாட்கள் முதல் பத்து நாட்கள் வரை சிறப்பாக நடைபெறும். நிறைவு நாளன்று ஊர்வலமும், சிலைக் கரைப்பும் நடைபெறும்.

ஆனால், இந்த வருடம் எப்போதும் இல்லாமல் சில அதிகாரிகளின் அதீத உற்சாகத்தால் பல தடங்கல்களைச் சந்திக்க நேரிடுகிறது. எக்காரணமும் இன்றி, தேவையற்ற தொல்லைகளை அந்தச் சில அதிகாரிகள் ஏற்படுத்தி வருகின்றனர். இந்து ஒற்றுமை உணர்வோடும், சாதி நல்லிணக்கத்திற்காகவும் உற்சாகத்தோடு வரும் இளைஞர்களுக்கு விநாயகர் வைத்து வழிபட அனுமதி மறுக்கப்படுகிறது.

இதுவரை, விநாயகர் வைத்து வழிபட்டவர்களைத் தவிர புதிதாக யாரும் விநாயகர் வைத்து வழிபட அனுமதியில்லை எனக் கூறுவது எந்த வகையில் நியாயம் எனத் தெரியவில்லை. இதன் காரணமாக, இந்துக்கள், குறிப்பாகஇளைஞர்கள் மிகவும் கொதித்துப்போய் உள்ளார்கள். விநாயகர் வைத்து வழிபட அனுமதி இல்லை எனக் கூறுவது எந்த வகையான மதச்சார்பின்மை எனத் தெரியவில்லை. இந்த அதிகாரிகள் யாரைத் திருப்திபடுத்துவதற்காக இதனைச் செய்கிறார்கள் என்றும் புரியவில்லை.

புதிதாக தாமும் விநாயகர் வைத்து வழிபடுவது மட்டுமல்லாமல் சமுதாய ஒற்றுமைப் பணியில் கலந்து கொள்ள வேண்டுமெனவும், அதற்குக் காவல்துறையினர் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்றும் மக்கள் எதிர்பார்ப்பது இயல்பே. வழிபாட்டு உரிமையை மறுப்பது ஜனநாயக விரோதமானதும், சர்வாதிகார செயலும் ஆகும். மாநில அரசை சந்தோஷப்படுத்துவதாகக் கருதி சில அதிகாரிகள் செய்யும் இச்செயலால் அரசுக்கு எதிரான கருத்து உருவாகிறது என்பதைத் தமிழக முதல்வர் அவர்களும், துணை முதல்வர் அவர்களும் கவனத்தில் கொள்ள வேண்டுகிறோம்.

ஒவ்வொரு வருடமும் புதிதாக சர்ச்சுகளும், மசூதிகளும் வந்து கொண்டே இருக்கின்றன. அவை அனைத்தும் நிரந்தரக் கட்டுமானங்களாகும். இதையெல்லாம் அனுமதிக்கின்ற காவல்துறை, சில நாட்கள் மட்டுமே வைத்து வழிபடப்படும் விநாயகர் எண்ணிக்கையை மட்டும் கட்டுப்படுத்துவது முறையானதன்று.

வேளாங்கண்ணி மேரிமாதா விழாவின்போது மேரி சிலை வைப்பதும், மொகரத்தின்போது முஸ்லீம்கள் சின்னங்களை வைப்பதும் ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகிறது. அவர்கள் யாராவது காவல்துறையிடம் அனுமதி பெறுகிறார்களா? அவர்களது எண்ணிக்கையைக் காவல்துறை சட்டம் ஒழுங்கைக் காரணம் காட்டி கட்டுப்படுத்துகிறதா? என்ற கேள்வி இந்துக்களிடம் எழுகிறது.

மேலும், கடந்த வருடங்களைப் போலில்லாமல், இந்த வருடம் விழா சுமுகமாக நடைபெற விடுவதில்லை என்ற முடிவோடு இந்த அதிகாரிகள் செயல்படுவதாகத் தெரிகிறது. இந்த வருடம் விநாயகர் சதுர்த்தி விழாவில், எங்கேனும், ஏதேனும் பிரச்னைகள் ஏற்பட்டால் அதற்கு இந்த அதிகாரிகளே பொறுப்பாவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்கள் ஆகியோர் இவ்விஷயத்தில் தலையிட்டு விழா மற்றும் ஊர்வலம் சுமுகமாக நடைபெற தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும், பிரச்னை ஏற்படுத்தும் அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கைகளை எடுக்கவும் இந்து முன்னணி கேட்டுக்கொள்கிறது.

என்றும் தேசியப் பணியில்

**இராம கோபாலன்**
நிறுவன அமைப்பாளர்

---

**இந்த அறிக்கையைத் தங்கள் பத்திரிகையின் அனைத்து பதிப்புகளிலும் வெளியிட வேண்டுகிறோம்.**